சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. C. ராஜேஷ், B.A., B.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.117/2020</u>

10.08.2026

வா.சா.2 திரு. விக்னேஷ்வரன்

**<u>3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் மணவாளம்பேட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 1 மாதமாக மேற்படி கிராமத்தில் வேலை பார்த்து வருகிறேன். வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10 ஆவணத்தை நான் வழங்கவில்லை என்றால் சரிதான். வருவாய்துறை நிலைய ஆணைகளின்படி நிலத்தின் உரிமையாளருக்கு தேவைப்படும் சான்றிதழ் வழங்குவோம் என்றால் சரிதான். குத்தகைதாரருக்கு சான்று வழங்குவோமா என்றால் அவர் சாகுபடி செய்தால் வழங்குவோம். வயலில் உதவி செய்யும் நபர்களுக்கு சான்றிதழ் வழங்கமாட்டோம் என்றால் சரிதான்.

2. தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் ருக்மணி, கிருஷ்ணவேனி, நவநீதன்பிள்ளை பெயரில் உள்ளது. புல எண்.81/8 எ கோவிந்தம்மாள் பெயரில் உள்ளது. தாவா சொத்திற்கு வாதி தெட்சிணாமூர்த்தி உரிமையாளர் அல்ல என்றால் புல எண்.81/5 சி-க்கு உரிமையாளர் அல்ல. தெட்சிணாமூர்த்தி பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் வாதி குத்தகைதாரரா என்றால் இல்லை, சாகுபடி செய்துவருகிறார்.

3. தாவா சொத்தை எப்போதும் வாதி சாகுபடி செய்யவில்லை என்றும் அவர் சாகுபடி செய்துவருவதாக வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி சாகுபடி செய்வதாக சொல்லி ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வாதி சாகுபடி செய்துவந்தால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றும் பிரதிவாதிகள் தாவா சொத்தை சாகுபடிசெய்துவருவதால் தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்கள் குறித்து சாட்சியமளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றும் வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்க வேண்டும் என்பதால் அவ்வாறு நான் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு தெரியுமா என்றால் வழக்கு சம்பந்தமாக விசாரணைக்கு வந்த வகையில்

தெரியும். வாதி அரசியல் செல்வாக்கு உள்ளவர் என்றும் அதனால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதிவரை பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2026.08.10 17:59:49 +0530

Subordinate Judge,
Tiruvarur.